### திருப்பூர் மாவட்டம் சிக்கனூத்து அருகில் ரோந்துப் பணியின் போது உயிரிழந்த

# குடிமங்கலம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் குடும்பத்தினருக்கு ரூ.1 கோடி நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஆக.7-

திருப்பூர் மாவட்டம், சிக்கனூத்து அருகில் ரோந்துப் பணியின்போது உயிரிழந்த குடிமங்கலம் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் அவர்களின் குடும்பத்தி னருக்கு ஆறுதல் மற்றும் ரூபாய் ஒரு கோடி நிதியுதவி வழங்க தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

திருப்பூர் மாவட்டம், குடிமங்கலம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிப்புரிந்து வந்த சண்முகவேல் (வயது 57) மற்றும் ஆயுதப்படைக் காவலர் அழகுராஜா ஆகிய இருவரும் 05.08.2025 அன்று இரவு 11.00 மணியளவில் ரோந்துப் பணியின்போது சிக்கனூத்து அருகில் தனியரின் தோட்டத்து சாலையில் நடந்த அடிதடி பிரச்சினை குறித்து தகவல் அறிந்ததும் விசாரிக்க சம்பவ இடத்திற்குச் சென்றபோது அடிதடி பிரச் சினையில் ஈடுபட்டிருந்த மூவர் சிறப்பு உதவி ஆய்வாளர் மற்றும் ஆயுதப் படை காவலர் ஆகிய இருவரையும் துரத்திச் சென்று அரிவாளால் வெட்டியதில் சிறப்பு உதவி ஆய்வாளர் சண்முக வேல் என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும், வேதனையுமடைந்தேன்.

சிறப்பு உதவி ஆய்வாளர் சண்முகவேல் அவர்களின் உயிரிழப்பு தமிழ்நாடு காவல்துறைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். இந்தக் கொடூரச் செயலில் ஈடுபட்ட குற்றவாளிகளை விரைந்து கைது செய்ய காவல்துறையினருக்கு உத்தரவிட்டுள்ளேன்.

சண்முகவேல் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், அவரது உறவினர்கள் மற்றும் அவருடன் பணிபுரிபவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவரது குடும்பத்தி னருக்கு ஒரு கோடி ரூபாய் நிவாரண நிதி வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

### முதலீடுகளுக்கான முதல் முகவரி ஆகியுள்ளது தமிழ்நாடு!

# முதலமைச்சரின் கூர்மதி வழிகாட்டுதலே வளர்ச்சியைப் பெற்றுத் தந்துள்ளது!

## நிதியமைச்சர் தங்கம் தென்னரசு பேட்டி!



சென்னை, ஆக.7-

''முதலீடுகளுக்கான முதல் முகவரி ஆகியுள்ளது தமிழ்நாடு! முதலமைச்சரின் கூர்மதி வழிகாட்டுதலே வளர்ச்சியைப் பெற்றுத் தந்துள்ளது'' என்று நிதி யமைச்சர் தங்கம் தென்னரசு செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.

நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு நேற்று சென்னை அறிவாலயத்தில் செய்தியாளர்களைச் சந்தித்து அளித்த பேட்டி வருமாறு :-

முதலமைச்சரின் வழிகாட்டுதலோடு - சீரான கொள்கைநெறி வழியில் நடக்கும் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளில் ஒன்று, மணிமகுடத்தில் மற்றொரு பொறித்த வைரக்கல்லாகத் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி இரட்டை இலக்கத்தை எட்டி இருக்கிறது.

ஏற்கனவே நாம் சொல்லிருக்கக்கூடிய 9.69% என்கிற அந்த GSDP உடைய இலக்கையும் தாண்டி, இன்றைக்கு 11.8% பொருளாதார குறியீடுகள் உயர்ந்து இருக்கின்றன. ஏறத்தாழ 12% நெருங்கி வரக்கூடிய வாய்ப்பை பெற்று இருக்கிறோம்.

நம்முடைய சாதனையை நாம்தான் முறியடிக்க முடியும் என்கிற வகையில் 9.69% என்ற ஒற்றை இலக்கத்தில் இருந்த பொருளாதார வளர்ச்சி சதவீதத்தை இன்றைக்கு இரட்டை இலக்கத்திற்கு கொண்டு வந்திருக்கிற மகத்தான சாதனையை முதலமைச்சருடைய ஆட்சி உருவாக்கியிருக்கிறது.

இந்த இரட்டை இலக்கத்திலே பொருளாதார ஆட்சியை உருவாக்குவது, Real terms-ல் வளர்ச்சி பெறுவது என்பது கலைஞர் அவர்கள் ஆட்சி பொறுப்பிலே இருந்தபோது 13% வளர்ச்சியை நாம் பெற்று இருந்தோம். அதன்பின் 14 வருடத்திற்கு பிறகு இன்றைக்கு முதலமைச்சரின் ஆட்சியில் தான் இரட்டை இலக்க வளர்ச்சியைத் தமிழ்நாடு பெற்று இருக்கிறது.

இந்திய அளவில் பல மாநிலங்களை ஒப்பிடும் போது தமிழ்நாடுதான் இந்த இரட்டை இலக்க வளர்ச்சியை பெற்று இருக்கிறது என்பது குறிப்பிட்டத் தக்கது. எனவே இந்த வளர்ச்சி என்பது 2030ஆம் ஆண்டு 1 ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரத்தை எட்டுவோம் என்பதற்கு திடமான வழியை வகுத்து தந்துள்ளது.

முதலமைச்சரின் சீரிய முயற்சிகளிலான தொழில் முதலீடுகள், தொழில் முதலீடுகள் மூலம் கிடைத்த வேலை வாய்ப்புகள் என அனைத்தின் காரணமாக இந்தப் பொருளாதார வளர்ச்சி அமைந்திருகிறது. பொருளாதார வளர்ச்சிக்கான முழு சூழ்நிலை களையும் நாம் உருவாக்கி இருக்கிறோம். நாம் முதலீடுகளுக்கான முதல் முகவரி தமிழ்நாடு என்கிற அளவில் முதலமைச்சர் முயற்சியின் காரணமாக ஈர்க்கப்பட்டு இருக்கக்கூடிய ஏராளமான முதலீடுகளே இந்தப் பெருமையைத் தந்து இருக்கிறது.

நிதி நிலைமையை நாம் சரியாகக் கையாண்டு இருக்கிறோம்; நாட்டின் பொருளாதாரத்தை நாம் உயர்த்தி இருக்கிறோம். கடன் வாங்குகிறார்கள் என குற்றச் சாட்டு வைக்கிறார்கள். ஆனால் வரைமுறைகளுக்கு உட்பட்டு முதலீடுகளுக்காக நாம் வாங்குகின்ற கடன்கள் தமிழ்நாட்டின் வளர்ச்சியை ஊக்குவித்துள்ளது என்பதைக் காட்டுகின்றது. ஒன்றிய அரசு நமக்கு உரிய நிதிகளை விடுவிக்காத போதிலும், நமது முதலமைச்சரின் கூரிய நோக்கிலான வழிகாட்டுதல் மூலம் இந்த வளர்ச்சியைப் பெற்றுள்ளோம்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு பேட்டியில் கூறினார்.

### சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் 9 ஆம் தேதி

# கழக பொறியாளர் அணி நிர்வாகிகளுக்கான நேர்காணல்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிக்கை!



சிவகங்கை.ஆக.7-

சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே. ஆர்.பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது.

கழகத் தலைவர் முதல்வர் தளபதி அவர்களின் அறிவுறுத்தலின்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் கழக பொறியாளர் அணிக்கான நிர்வாகி களுக்கான நேர்காணல் நடைபெற்று வருகின்றது.

அந்த அறிவிப்பின்படி சிவகங்கை மாவட்டத்தில் கழக பொறியாளர் அணிகளுக்கான மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கழக பொறியாளர் அணிக்கான நிர்வாகி களுக்கான நேர்காணல் வருகிற 9ம்தேதி சனிக்கிழமை தேதி காரைக்குடியில் உள்ள தலைவர் கலைஞர் பவளவிழா மாளிகையில் காலை 11 மணி அளவில் எனது தலைமை கே ஆர். பெரிய கருப்பன் முன்னாள் அமைச்சர் மூ. தென்னவன், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் பி.அன்பழகன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் ஆறு. அழகப்பன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது. கியூஆர் கோடு மூலம் விண்ணப்பித்த வர்கள், பொறியியல் டிப்ளமோ, ஐ.டி.ஐ .போன்ற பொறியியல் துறை சார்ந்த படிப்புகளை நிறைவு செய்துள்ளவர்கள் தற்போது இந்த படிப்பினை படித்துக் கொண்டிருக்கும் இளைஞர்களும் நேர்காணலில் பங்கேற்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே.ஆர் .பெரிய கருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.



திருவள்ளூர் தொகுதி கடம்பத்தூர் கிழக்கு ஒன்றியம் புது மாவிலங்கை ஊராட்சி அகரம் கிராமத்தில் சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து ரூபாய் 8.00 இலட்சம் மதிப்பீட்டில் பல்நோக்கு கட்டடம் அமைக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்காக தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. இராஜேந்திரன் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மாவட்ட அவை தலைவர் க. திராவிட பக்தன், மாநில விவசாய அணி துணை செயலாளர் ஆர்.டி.இ. ஆதிசேஷன், ஒன்றிய செயலாளர் கே அரி கிருஷ்ணன், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் பி.கே. நாகராஜ், வி. எஸ். நேதாஜி, ஒன்றிய கழக நிர்வாகிகள் ராஜசேகர், மெய்யழகன் ஜெகதாம்பாள் மந்தவெளியான், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் என். பிரசன்னகுமார், எம். சங்கர், தமிழ்ச்செல்வன், எம். சேகர், பிஞ்சிவாக்கம் மணிகண்டன் ஆர். வாசு, ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் தனலட்சுமி பாண்டியன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# தலைவா! உன் புகழ் வாழ்க!



தந்தை பெரியாரும்
சிந்தைநிறை அண்ணாவும்
விந்தையென ஒருருவாய்
வந்தஎங்கள் மன்னவனே!

“வீழ்வதுநாம் என்றாலும்
வாழ்வதுநம் தமிழ்”என்றே
ஆழ்மனத்தி லே,பதிய
அனைவருக்கும் சொன்னவனே!

அகரச்செந் தமிழுக்கோர்
அரணாக வாய்த்தவனே!
சிகரத்தின் உயரத்தில்
செம்மொழியை வைத்தவனே!

இன்னலுற்று வெஞ்சிறையில்
வெந்தவனே! எந்தமிழர்
முன்னேறப் படிக்கட்டாய்
முதுகெலும்பைத் தந்தவனே!

அடல்மறவர், யாருக்கும்
அஞ்சாத தமிழர்என
உடன்பிறப்புப் பெரும்படையை
உருவாக்கி வென்றவனே!

தென்புலத்தை மீட்கவந்த
தீரர்களை, வீரர்களை
அன்பு முகம்காட்டி
அரவணைத்துச் சென்றவனே!

மறையுமோ அழகுமுகம்?
மறக்குமோ ஆசைமுகம்?
உறங்கினால் கனவிலும்
உனதுமுகம்! எம்தலைவா!

நினைவுநாள் உனக்கில்லை!
நேற்று,இன்று, நாளைஉன்னை
நினையாத நாள்ஒன்று
நிச்சயமாய் எமக்கில்லை!

வாராது போல்வந்த
மாமணிநின் திருவடியை
ஈரக் கடலலைகள்
எப்போதும் வணங்கிஎழும்!

கோள்களும்உன் பெயர்போற்றிக்
கொண்டாடும்! நாட்காட்டித்
தாள்களும்உன் பொதுவாழ்வுச்
சாதனையைக் கவிபாடும்!

மூப்பிலும்நீ தமிழ்நாட்டை
முழுவதுமாய் சுற்றிவந்து
காப்பாற்றி வைத்ததனால்
கைகூப்பும் எண்டிசையும்!

மேற்குமலைத் தொடர்ச்சியிலே
மிதந்துவரும் காற்றும்,உன்
நாற்காலிச் சக்கரத்தை
நாடிவந்து முத்தமிடும்!

மழைமுகில்உன் எழுதுகோல்
மையில்,மையல் கொண்டதனால்
பொழியும்இளந் தூறல்எனும்
பூத்தூவி உனைவணங்கும்!

வெண்ணிலவின் தலைமையிலே
விண்மீன்கள் கூட்டம்இந்த
மண்மீதுன் நினைவிடத்தில்
மலர்வளையம் வைக்கவரும்!

ஓங்கும்எழிற் பூவனங்கள்
ஒன்றாகி அணிவகுத்துத்
தூங்கும்உன்றன் கல்லறையில்
தோரணமாய் காட்சிதரும்!

முன்விழித்து நீஎழுந்த
பின்,விழிக்கும் சூரியன்உன்
பொன்னடிக்குக் கண்விழித்துத்
தன்வணக்கம் சொல்லவரும்!

நோற்றவத்தால் பிறந்தவனே!
நூலகநூல் அத்தனையும்
ஆற்றாமல் படபடக்கும்!
அறிவுமகன் உன்பிரிவால்!

தோற்றமுண்டு! முடிவில்லை!
துலங்கும்உன்பேர் காலம்வென்று
வீற்றிருக்கும் பெரும்பேறு!
விழாவெடுக்கும் வரலாறு!

கலைவணங்கும்! சிலைவணங்கும்!
“கருவில்வந்த திரு”நின்னை
மலைவணங்கும்! வான்வணங்கும்!
வையகமே உனைவணங்கும்!

உலகமொழி அத்தனையும்
ஒருகுடைக்கீழ் வந்துநின்றே
தலைவணங்கும்! உனதுபுகழ்
தமிழ்போல வாழ்க!என்றே!



**... கவிச்சுடர் கவிதைப்பித்தன்.**

### இன்று முத்தமிழறிஞர் கலைஞரின் 7 ஆம் ஆண்டு நினைவு நாள்!

# தேனி வடக்கு மாவட்டத்தில் நகரம் - கிராமங்கள் தோறும் புகழஞ்சலி!

## மாவட்டக் கழகச் செயலாளர் – தங்கதமிழ்ச்செல்வன் எம்.பி. அறிவிப்பு!



தேனி, ஆக.7-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7 ஆம் ஆண்டு நினைவு நாள் ஆகஸ்ட் 7 இன்று தேனி வடக்கு மாவட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருஉருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது. என்று தேனி வடக்கு மாவட்ட கழகச் செயலாளரும், தேனி பாராளுமன்ற உறுப்பினர் தங்கதமிழ்செல்வன் அறிக்கையில் அறிவித்துள்ளார். இது குறித்து அவரது அறிக்கை பின்வருமாறு.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தனது எழுத்து திறன், அரசியல் ஆற்றல், மற்றும் சமூக நலனுக்காக செய்த பணிகள் மூலம் தமிழர்களின் மனதில் நிலைத்தவர். அவரது படைப்புகள், சாதனைகள், மற்றும் சமூக மாற்றத்திற்காக அவர் ஆற்றிய சேவைகள் மக்கள் மனதில் என்றும் நிலைத்து நிற்கும். நாவில் செந்தமிழின் இனிமையும், வீரியத்தையும், மென்மையையும், மேன்மையையும் களிநடம் புரிய வைத்த கன்னித்தமிழ் படைப்பாளியாக தலைவர் கலைஞர் அவர்கள் விளங்கினார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக அனைத்து முதலமைச்சர்களுக்கும். பல்வேறு கட்சித் தலைவர்களுக்கும் முன்மாதிரியாக தலைவர் கலைஞர் அவர்கள் இருந்துள்ளார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் கலைஞர் செய்து நிறைவேற்றிய திட்டங்கள், நிறைவேற்றிய சாதனைகளின் மூலமாக இன்னும் நூறு ஆண்டுகளுக்கு அவருடைய பெயர் இந்த நாட்டில் நினைவு கூரப்படும். முத்தமிழின் முகவரியாக, புகழ் சின்னமாக ஒளி வீசும் தலைவர் கலைஞர் அவர்களின் 7ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வாக (07.08.2025 - வியாழக்கிழமை) இன்று தேனி வடக்கு மாவட்டத்தில், ஒன்றியம், நகரம், பேரூர், வார்டு, கிளைக் கழகங்கள் தோறும் அனைத்து இடங்களிலும் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் அஞ்சலி செய்து வீரவணக்கம் செய்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், திருப்போரூர் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் அவசரச் செயல்வீரர்கள் கூட்டம் மாவட்டச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆலோசனைப்படி, ஒன்றியக் கழகச் செயலாளர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், ஒன்றியக் குழு பெருந்தலைவர் எல்.இதயவர்மன் தலைமையேற்று நடத்தினார். இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் ஜி.சி.அன்புசெழியன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் வீ.விஜயகுமார், திருப்போரூர் வடக்கு ஒன்றியக் கழக நிர்வாகிகள் எல்.ஜெயபால், ஏ.ரமேஷ், மு.ராஜாராம், எஸ்.ராமகிருஷ்ணன், ஏ.கருணாகரன், மு.மயில்வாகனன், என்.ஜி.கெஜராஜன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.